# 8 நாலாயிரத் திவ்விய பிரபந்தம்

சைவ சமயத்தவர்களுக்குப் பன்னிரு திருமுறைகள் எவ்வாறு முக்கியமாக விளங்குகின்றதோ அவ்வாறே வைணவர்களுக்கு நாலாயிரத் திவ்விய பிரபந்தம் முக்கியம் வாய்ந்த நூலாகும்.

நாலாயிரத் திவ்விய பிரபந்தம்; ஸ்ரீ திவ்வியபிரபந்தம், எனும் பெயரால் வழங்கப்படுகிறது. வைணவ ஆழ்வார்கள் பன்னிருவர் பாடிய பாசுரங்களைக் கொண்டு ஸ்ரீ நாத முனிவரால் தொகுக்கப்பட்டதே நாலாயிரத் திவ்விய பிரபந்தம் ஆகும்.

வைணவ ஆழ்வார்கள் பன்னிருவருள் தொண்டரடிப் பொடியாழ்வாரும் ஒருவர். விப்ரநாயனார் என அழைக்கப்பட்ட இவர், விஷ்ணுபெருமானின் சிறப்பைப் போற்றித் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்னும் பாசுரங்களைப் பாடியுள்ளார். இவர் பாடிய திருமாலையில் உள்ள "குடதிசை முடியை வைத்து" என்ற பாசுரத்தைக் கற்போம்.

**குடதிசை முடியை வைத்து**
**குணதிசை பாதம் நீட்டி**
**வடதிசை பின்பு காட்டித்**
**தென்திசை யிலங்கை நோக்கி**
**கடல்நிறக் கடவு ளெந்தை**
**அரவணைத் துயிலு மாகண்டு**
**உடலெனக் குருகு மாலோ!**
**என்செய்கேன் உலகத்தீரே!**

## பதவுரை:-

குடதிசை- மேற்குத் திசை: முடி- தலை, கிரீடம்: குணதிசை- கிழக்குத் திசை; பின்பு- பின்புறம்; நோக்கி- பார்த்து; கடல் நிறம்- நீல நிறம்; எந்தை- எனது தந்தை; அரவணை- (அரவு+அணை) பாம்பணை; துயிலுதல்-நித்திரை செய்தல், பள்ளி கொள்ளுதல்; உருகுதல்- நெகிழ்தல்

**பொழிப்புரை:**

எனது தந்தை போன்றவரான விஷ்ணு பகவான் நீல நிறத்தை உடையவர். அவர் மேற்குத் திசையில் முடியையும் கிழக்குத் திசையில் பாதங்களையும் வைத்துக்கொண்டு, வட திசைப்பக்கம் பின்புறம் காட்டித் தென்திசையிலுள்ள இலங்கையைப் பார்த்துக்கொண்டும் பாம்பணையிலே பள்ளி கொள்கிறார். அந்தக் காட்சியைப் பார்க்கும் போது எனது உடல் புளகாங்கிதத்தால் நெகிழ்கிறது. இத்தகைய சிறப்பினைக் காண்பதற்கு என்ன புண்ணியம் செய்தேனோ? உலக மக்களே கூறுங்கள்.

**மேல்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. வைணவ சமயத்தாரின் முதன்மையான தமிழ்த் தோத்திர நூல் எது?
2. ஸ்ரீ திவ்வியபிரபந்தம் என அழைக்கப்படும் நூல் எது?
3. தொண்டரடிப் பொடியாழ்வார் பாடிய நூல்கள் எவை?

**செயற்பாடு**

01) “குடதிசை முடியை வைத்து” என்ற திருமாலையை மனனம் செய்து இசையுடன் பாடுக.

02) தரப்பட்ட திருமாலைப் பாசுரத்தையும், அதன் பொழிப்புரையையும் எழுதி வகுப்பில் காட்சிப்படுத்துக.

**பாடச்சுருக்கம்**

- வைணவ சமயத்தவர்களின் முதன்மை நூல் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் ஆகும்.
- நாலாயிரத் திவ்விய பிரபந்தம் பன்னிரு ஆழ்வார்களும் பாடிய பாசுரங்களைக் கொண்டு தொகுக்கப்பட்டதாகும். அதனைத் தொகுத்தவர் ஸ்ரீ நாத முனிவர் ஆவார்.
- தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்பவற்றைப் பாடியுள்ளார். **குடதிசை முடியை வைத்து** என்ற பாசுரம் திருமாலையிலுள்ள பாசுரமாகும்.